1973 நவம்பர் 28]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்தத் தியாகிகள் பட்டியலைப் பரிந்துரை செய்வதில்கூட இதில் ஒரு இரட்டையாட்சி முறைதான் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தியாகிகளுக்கு மானியம் வழங்குவதில் அதுபற்றிப் பரிந்துரை செய்து தமிழக அரசு அனுப்பும்போது மத்திய அரசு பரிசிலனை செய்து யார் யாருக்கு இந்த மானியம் வழங்கலாம் என்பதில் ஒருமித்த ஒரு முடிவில்லாமல் இப்போதிருக்கிறது. நாம் ஒரு ஏழாயிரம் அல்லது எண்ணாயிரம் பேர்களை சிபார்சு செய்து அனுப்புகிறோம். அவர்கள் யார் யாரைத் தேர்ந்தெடுக்கலாம் என்று பரிசீலனை செய்கிறார்கள். அதல்லாது அவர்களாகவே நேரடியாக ஒரு ஆயிரம் இரண்டாயிரம் பேர்களுக்கு அவர்கள் வழங்குகிறார்கள். இந்நிலையில் மொத்தமாகவே எங்களிடம் பணத்தைக் கொடு என்று மத்திய அரசைக் கேட்டால் அவர்கள் இணங்க மாட்டார்கள்.

நண்பர் திரு. சிறைமீட்டான் அவர்கள் கேள்விக்குப் பதில் சொல்லும்போது தொடர்ந்து சிறையில் இருக்க வேண்டும் என்று நான் குறிப்பிட்டேன். ஆறு மாதம் என்பது தொடர்ந்து இருக்க வேண்டுமென்பதில்லை. இடையிடையே இடைவெளி இருந்தாலும் கூட அது ஆறு மாத காலமாக கணக்கில் எடுத்துக்கொள்ளப் படுவதாக மத்திய அரசு கூறுகிறது.

Price of School text books

*451 Q.—THIRU N. K. PALANISWAMY THIRU D. S. A. SIVAPRAKASAM: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the steps taken to reduce the price of the text books supplied to the students?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பள்ளிப் பாட புத்தகங்களை வெளியிடும் தமிழ் நாடு பாடநூல் நிறுவனம், மிகக் குறைந்த விலைக்கே இப்புத்தகங்களை மாணவர்கட்கு வழங்குகிறது. புத்தகங்களின் விலை அதே தரத்திலுள்ள தனியார் புத்தகங்களின் விலையை விடக் குறைவாகவே உள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: இந்தப் புத்தகங்களை தனியார் ப்ரின்ட் செய்து வெளியிடுகிறார்கள். ஆகவே, அவை அதிகப் படியான விலைக்கு விற்கப்படுகிறது. தகுந்த சமயத்தில்

வேண்டுமென்றே அதற்கு ஸ்கோர்ஸிடி ஏற்படுத்தி அதிக விலைக்கு விற்கப்படுகிறது. ஆகவே, சர்க்காரே ப்ரின்ட் செய்து அதை விற்பதற்கு ஏற்பாடு செய்தால் அதிக லாபம் வருமே, அதை என் சர்க்கார் செய்யவில்லை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போது ஒன்றாவது வகுப்பில் இருந்து 11 ஆவது வகுப்பு வரையில் உள்ள பாடப் புத்தகங்கள் எல்லாவற்றையும், சிறப்புப் பாடங்கள் தவிர மற்றப் பாடப் புத்தகங்களையெல்லாம் தமிழக அரசுதான் வெளியிடுகிறது. தமிழ்நாடு பாட நூல் வெளியீடு நிறுவனம்தான் வெளியிட்டு வருகிறது. நாம் எவ்வளவு குறைந்த விலைக்குக் கொடுக்க முடியுமோ அவ்வளவு குறைந்த விலைக்கு கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்.

திரு. ஆ. பாந்தாமன் : கல்லூரிகளுக்கான விஞ்ஞான பாட நூல்களின் விலை அதிகமாக இருக்கிறது. பெரும்பாலும் அந்தப் புத்தகங்கள் வெளிநாட்டு விஞ்ஞானிகளால் எழுதப்பட்ட நூல்களாகும். அவற்றின் விலையைக் குறைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பொதுப் படையாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். எந்த ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டாலும் விலை குறைவாகத் தான் இருக்கும். அதே அளவிலுள்ள மேல் நாட்டுப் புத்தகங்களை எடுத்துக்கொண்டு பார்த்தால் ரூ. 20, 25, 30, 35 என்றாகிறது ஆனால் நம் நாட்டில் பார்த்தால் ரூ. 3, 3-50-க்கு மேல் போகாத அளவிற்கு இந்த நூல்களை வெளியிட்டுக் கொண்டு வருகிறார்கள்.

Experts in Telugu language in Text Book Committee

THIRU D. S. A. SIVAPRAKASAM Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether the Education Department has included experts in Telugu language in the Text Book Committee of the State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) செல்வி ஒய். சரோஜினிதேவி, முதல்வர், அரசினர் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர், செல்வி பி. ஹேமாவதி, ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியை, கல்யாணம் பெண்கள் உயர்நிலைப்பள்ளி,